(ஈ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ் 1979—80-ம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(உ) அவைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 221 (1)-வது விதியின் கீழ் 1979—80-ம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(5) அறிவிப்பு.

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) பொதுக் கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி), உரிமைக் குழு (கமிட்டி

ஆப் பிரிவிலேஜஸ்), அவைக் குழு (ஹவுஸ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3—00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாள், வியாழக்கிழமை, பிற்பகல் 3—00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் நாள், வெள்ளிக் கிழமை பிற்பகல் 3—00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள், சனிக்கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1—00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, 25-ம் தேதி என்று குறிப்பிட்டார்கள். மரபுப்படி பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. இங்கே இல்லை. அவர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய வாய்ப்பு இல்லை. அவர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைத்து பின்னாலே சேர்ப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமா? தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கூத்தகுடி சண்முகம், நான் தங்களை நன்றாக உணர்ந்தவன். அவர்கள் செயலாளர் அறையிலே சென்று வேட்பு மனுக்களை அளிக்கலாம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டேன். அந்த வாய்ப்பு உண்டா என்று கேட்டேன், சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் என்ற முறையில் அந்தத் தேர்தல்கள் எந்த எந்தத் தேதியில் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறேன். வேட்பு மனுக்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். உங்களுக்குள்ளே அவரவர்கள் முடிவு எடுக்க வேண்டுமே தவிர பேரவைத் தலைவர் செய்ய முடியாது. உங்களுடைய கட்சித் தலைவர்கள் செய்ய வேண்டிய முடிவு. ஆனால் செயலாளர் அறையிலே வேட்பு மனுக்களை அளிப்பதற்கு உரிமை உண்டு. அதை அவர்கள் போடலாம்.